විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය தலைமுறையொன்றின் பெருமிதம் Pride of a Generation

මගේ අංකය / எனது இல. / My No. ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல 04/2022

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................

දිනය / திகதி / Date 2022.06.08

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்கள்,

**விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் பழைய எண்: 82/83 மற்றும் M/F வகைகளின் கீழ் பதிவு செய்த பழைய உறுப்பினர்களை மீண்டும் இயங்கலையில் பதிவு செய்தல்**

மேற்குறித்த விடயம் தொடர்பில் 2017.10.12 ஆம் திகதிய 26/2017 ஆம் இலக்கப் பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2017.10.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்கம் ஓய்வூதியச் சுற்றறிக்கைகளின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் மறுபதிவு செய்வதற்கான தரவு முறைமையில் விபரங்கள் சேர்க்கப்படும் போது, அவ் விபரங்கள் தொடர்புடைய கோவையிற்கு பொறுப்புடைய அலுவலரால் அத் தனிநபர் கோவையின் பிரகாரம் சான்றளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

03. அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பட்டதும், கணினி முறைமையிலிருந்து எடுக்கப்பட்ட விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் புதிய உறுப்பினர் அட்டையின் பிரதி அலுவலரின் தனிநபர் கோவையில் சேர்க்கப்பட வேண்டும். மேலும் அச்சிடப்பட்ட விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய இணைப்புகளை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை என்பது இதன்மூலம் அறியத்தரப்படுகிறது.

04. விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர் இடமாற்றம் செய்யப்படும் போது பயனர் கணக்குகளை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய சேவை நிலையத்தில் பணிபுரியும் அதே விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர், புதிய சேவை நிலையத்தில் முந்தைய பயனர் கணக்கை மீண்டும் செயல்படுத்த முடியும்.

ஒப்பம்./ஏ. ஜகத் டி டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் – த.த.த
2. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த